**செய்தி வெளியீடு எண்: 261** **நாள்: 19.04.2012**

## தமிழக அரசு செய்தி வெளியீடு

## பன்றிக் காய்ச்சல் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள்

தமிழ் நாட்டில் பன்றிக் காய்ச்சல் இன்புளுயன்சா AH1N1 பாதிப்பு தொடர்பாக போர்க்கால அடிப்படையில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ் நாட்டின் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் பன்றிக்காய்ச்சல் நோய் சிகிச்சை மற்றும் வராமல் தடுப்பதற்கு தேவையான ஒசல்டாமாவிர் மருந்துகள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளது. பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கென தனியாக சிறப்பு வார்டுகள் அனைத்து மாவட்ட மருத்துவமனை மற்றும் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும் மற்றும் தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவமனையிலும் ஏற்படுத்தப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மாநில அளவில், உயர் அலுவலர்கள் மற்றும் மருத்துவ நிபுனர்கள் கொண்ட உயர் மட்டக்குழு அமைக்கப்பட்டு, பன்றிக்காய்ச்சல் நோய் குறித்த அனைத்து விவரங்களும் சேகரிக்கப்பட்டு, திங்கட்கிழமைதோறும் ஆய்வு செய்யப்பட்டு தேவையான அனைத்து தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அனைத்து மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் திங்கட்கிழமைதோறும் பன்றிக்காய்ச்சல் நோய் பற்றிய சிறப்பு ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, தேவையான நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு பன்றிக்காய்ச்சல் நோய் குறித்த ஆலோசனை கூட்டம் உடனடியாக நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காய்ச்சல், சளி மற்றும் தொண்டைவலி போன்ற அறிகுறிகளுடன் உள்ள நபர்கள் தாங்களாகவே மருந்துகளை (Self Medication) எடுத்து கொள்ள வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், கால தாமதம் செய்யாமல் உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனையை அல்லது உரிய மருத்துவரை அணுகி முறையான சிகிச்சை பெற்றுக்கொள்ள பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், தனியார் மருத்துவர்கள் பன்றிக்காய்ச்சல் நோய் சிகிச்சை குறித்து அரசு வழிகாட்டுதலில் தெரிவித்துள்ளவாறு மட்டுமே பரிசோதனை மற்றும் சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

காய்ச்சல் கண்ட நபர்கள் ஸ்டிராய்டு (Steroid) மற்றும் ஆஸ்பிரின் மாத்திரைகள் எடுத்துக்கொள்ள வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், பன்றிக்காய்ச்சல் குறித்து கூடுதல் தகவல்கள் பெற விரும்புபவர்கள் 24 மணி நேரம் செயல்படும் **044 – 24350496** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, பொது மக்கள் யாரும் பன்றிக்காய்ச்சல் குறித்து பீதியடையத் தேவையில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**இயக்குநர்,**
பொது சுகாதாரம் (ம)
நோய் தடுப்பு மருந்து துறை.

**வெளியீடு: –**

**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.